1970 மார்ச் 30]

திரு. கே. என். குமாரசாமி : சென்னை நகரத்திற்கு வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கு ரூ. 20 கோடி அரசாங்கம் செலவு செய்திருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி வட பெண்ணையாற்றிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவருவது பற்றியது. வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் பற்றிய கேள்வியல்ல. வட பெண்ணையாற்றிலருந்து தண்ணீர் கொண்டுவருவது பற்றிக் கேட்கவேண்டும்.

திரு. கே. விநாயகம் : இந்தத் திட்டத்தை இரு சர்க்காரும் சேர்ந்து போட்டு ஒரு மதிப்பீட்டிற்கு வந்தபிறகு, அந்தச் செலவை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆந்திர சர்க்கார் சொன்னதாகவும், அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற முறையில் அது விடுபட்டது. அப்படி வருகிற வழியில் அந்த ஆற்றுத் தண்ணீரைக் கொடுப்பதற்கு அவர்கள் யோசனை சொல்லியிருக்கிறார்கள். அதை வேண்டாம் என்று நமது சர்க்கார் சொல்லி, அதற்காகத்தான் இது தடைபட்டிருக்கிறதா ? இது பரிசீலிக்கப்பட்டு எப்பொழுது முடிவு எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னமாதிரி, கிருஷ்ணா, பெண்ணாறு நதிகளிலிருந்து சென்னை நகருக்குக் குடி தண்ணீரைக் கொண்டுவரவேண்டும் என்று ஏற்கனவே ஒத்துக்கொள்ளப்பட்டது. அதைக் குடி தண்ணீர் வசதிக்குப் பயன்படுத்திக்கொள்வதுபற்றிப் பரிசீலித்தது உண்டு. ஆனால் அதற்காக சோமசீலா திட்டத்தின்கீழ் ஒரு நீர்த்தேக்கம் கட்டவேண்டியிருக்கிறது. அதோடு நீர்ப்பாசன திட்டத்திற்கும் அதைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறார்கள். இதற்கு செலவு ஆகிற மொத்தப் பணத்தையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நடக்காத ஒரு யோசனையை ஆந்திர சர்க்கார் சொல்கிறார்கள். அவர்களுக்கு அதிக உற்சாகம் இல்லை. ஏனென்றால் அவர்களுக்கு பெரிய திட்டம், நாகார்ஜுனசாகர் திட்டம் இருக்கிறது. செலவைப் பகிர்ந்துகொள்ளும் பிரச்னை இருப்பதினால், அதில் காலதாமதம் ஏற்படும். காலதாமதம் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான், நாம் காவேரி நதித் திட்டத்தை மேற்கொண்டு இருக்கிறோம். இருந்தாலும், இன்னும் சென்னை நகரத்திற்குத் தண்ணீர் வேண்டியிருக்கிறது. இதற்காகத் தொடர்ந்து முயற்சி செய்து, ஒரு காலத்தில் இது வரலாம்.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சென்னைக் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க வேறு எதையும் பார்க்காமல் வடக்கே கொற்றலையாற்றிலிருந்து 'கலெக்ஷன் ஸிஸ்டம்'படி தண்ணீர் கொண்டுவரலாம் என்று பிரெஞ்சு நிபுணர் தெளிவான அறிக்கை கொடுத்திருக்கிறார்களே, அதைப்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை.

இளநிலைப்பொறியாளர்கள்

* 599 வினா.—**திரு. ஆர். கருப்பையா:**
திரு. எம். சுரேந்திர : } மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பணியாற்றும் இளம் பொறியாளர்களை அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களாக மாற்ற வேண்டுமென்று ஏதேனும் தகவல் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில் எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ஊதியக் குழுவின் பரிந்துரைகளை எதிர்பார்ப்பதென கருதப்படுகிறது.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இந்த பி. ஈ. படித்த மாணவர்கள் தங்களை ஏ. ஈ.க்களாக கெஜட் பதவியில் நியமிக்கவேண்டும் என்று மனு அனுப்பியிருக்கிறார்களே. அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ? மற்ற மாநிலங்களைப்போல் பி. ஈ. படித்தவர்களை ஏ. ஈ.க்களாக அமர்த்தி, ரூ. 375 சம்பளமும் கொடுக்கிறார்களே. அந்த வகையில் செய்ய சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தப் பிரச்சினைகளைப் பரிசீலித்து அரசாங்கத்திற்கு அறிவுரை கூறத்தான் சம்பளக் கமிஷனுக்கு அது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பி.வி.எஸ்.ஸி. படித்த மாணவர்கள் கெஜட் பதவி உள்ளவர்களாக செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் பி. ஈ. போன்று ஒரே நிலையில் படித்தவர்கள்தான். ஒரே நிலையில் உள்ளவர்களுக்கு ஒரே நியாயம் வழங்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர், என்ன சொன்னார் ? 'கமிஷன் வைத்திருக்கிறோம், அவர்களுடைய அறிக்கை வந்தபிறகு நடவடிக்கை எடுக்கலாம்' என்று சொன்னார்கள். இந்தக் கேள்வி சரியில்லை.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்திய அரசிடமிருந்து 'இந்தியன் எஞ்ஜினியர்ஸ் சர்வீஸ்' ஒன்று அமைக்க தமிழக அரசாங்கத்தின் கருத்து கேட்டு வந்ததா ? அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

Strike by State Transport workers.

* 600 Q.—Thiru K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there was a lightning strike by the Transport Busmen at Madras city about the 21st November 1969?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையின் தண்டையார்பேட்டைப் பணிமனையில் 1969-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் தேதி அன்று திடீர் வேலை நிறுத்தம் நிகழ்ந்தது. துறையின் மற்றப் பணிமனைகளில் வேலை நிறுத்தம் நிகழவில்லை.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, அங்குள்ள தொழிலாளர்களுக்குப் படி கொடுக்கப்படுவது சம்பந்தமாக, 9 நிமிஷம் வரை ப்ரேக் டவுன் ஆனாலும், 9 நிமிஷத்திற்கு மேல் ஆனாலும், படியில் கழித்துக் கொள்வது என்பது சம்பந்தமாக வேலை நிறுத்தம் வந்தது. அது இப்பொழுது சரிப்படுத்தப்பட்டுவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அவர்களுடைய குறைபாடுப் படிப் பிரச்சினையைப் பற்றித்தான் ஏற்பட்டது. ஆனால் முன் அறிவிப்பு இல்லாமல் செய்யப்பட்டது. படிப் பிரச்சினை பற்றி ஏற்கனவே உயர் மட்டக் குழுவின் சிபாரிசின் மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.